### தீமோத்தேயு 2 3:16-17

சர்வேசுரனுடைய மனுஷன் எவ்வித நற்கிரியையும் செய்வதற்குத் தகுந்த உத்தமனாவதற்குத் தேவ ஏவலால் அருளப்பட்ட வேதாகமங்கள் போதிப்பதற்கும், கண்டிப்பதற்கும், திருத்துவதற்கும், நீதிநெறியில் நடத்துவதற்கும் பிரயோஷஜனமுள்ளது. (2 இரா. 1:20.)

### எபேசியர் 6:11

நீங்கள் பசாசின் தந்திர சற்பனைகளுக்கு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாய் இருக்கும்படிக்குச் சர்வேசுரனுடைய போராயுதங்களை அணிந்துகொள்ளுங்கள். ( உரோ. 13:12.)

### இசாயாஸ் ஆகமம் 41:10

நீ பயப்படாதே; நாம் உன் னோடிருக்கிறோம், நம்பிக்கையில் தளராதே; ஏனெனில் நாம் (அபிர காம்) தேவனான உன் கடவுளாயிருக் கிறோம், அவருக்குச் செய்தது போலவே உன்னைப் பலப்படுத்தி உனக்கு உதவிபுரிவோம்; நம்மு டைய நீதிமானின் பலமாயிருந்த நம் வலது கரம்தான் உன்னையும் ஆதரிக் கும்.

### எபிரேயருக்கு எழுதிய நிருபம் 10:24-25

பரம அன்புக்கும் நற்கிரியைகளுக் கும் நமக்குத் தூண்டுதலுண்டாகும் படி ஒருவரை ஒருவர் கவனிப்போமாக. சிலருக்குத் துர்வழக்கமாய் இருக் கிறதுபோல நாம் சபைக்கூட்டத்தை விட்டுவிடாமல் ஒருவரை ஒருவர் தேற்று வோமாக. அந்த மகாநாள் எவ்வளவுக்கு நெருங்கக் காண்பீர்களோ அவ்வளவுக்கு அதிகமாய் இவ்விதஞ் செய்யுங்கள்.

### பழமொழியாகமம் 3:5-6

நீ உன் விமரிசையில் ஊன்றி நில்லாமல், உன் முழு இருதயத்து டனே ஆண்டவரில் நம்பிக்கை வை. உன் சகல வழிகளிலும் அவரை நினைப்பாயாகில் அவர் உன் பாதச் சுவடுகளை நடத்துவார்.

### சங்கீதங்கள் 119:9

சங்கீதங்கள் 16:8

உமது வலது கரத்திற்கு இடர் செய்கிறவர்களிடத்தில் நின்று கண் மணியைப் போல் என்னைக் காத்தருளும்; என்னைத் துன்பப்படுத்தின அக்கிரமிகளுடைய கையில் அகப் படாதபடிக்கு என்னை உமது செட்டைகளின் நிழலில் ஆதரியும்.

இசாயாஸ் ஆகமம் 40:29

அவர்தான் களைத்தவனுக்குப் பலங்கொடுக்கின்றவர்; அபல மானோர்க்குச் சத்துவத்தையும் பலத்தையும் மூட்டுகிறவர்.

அபாக்கூக் ஆகமம் 3:19

என் பிரான் ஆண்டவர் என் ஞக்துவமாயிருப்பார்; மான் உடைத் தானவைபோல் எனக்குக் கால்களை அமைப்பார்; என்னை வெற்றி (வாகை)யனாய்க் கீத கோஷத்தோடு எமது பர்வதங்கண்மீது கூட்டிப் போவார்.

இசாயாஸ் ஆகமம் 46:4

நீங்கள் என்னைச் சுமக்க வேண்டாம்; நாமே உங்களை விருத் தாப்பியப் பரியந்தம், வயோதிப காலந் தனையுந் தூக்கிப் போவோம்: உங்க ளைச் சிருஷ்டித்தோம், இன்னும் உங்களைத் தாங்குவோம், தூக்கிப் போவோம், இரட்சிப்போம்.

உரோமாபுரியார் 1 8:26

அவ்வண்ணமே, இஸ்பிரீத்துவானவரும் நமது பலவீனத்தைத் தாங் கிக்கொண்டுவருகிறார். எவ்வாறெனில், நாம் தக்கபடி மன்றாடிக் கேட்கிற தென்னவென்று அறியாமலிருக்கி றோம். ஆனால் இஸ்பிரீத்துவானவரே நமக்காக வாக்குக்கெட்டாத பெரு மூச்சுகளோடு பிரார்த்திக்கிறார்.

உரோமாபுரியார் 1 14:4

மற்றொருவனுடைய ஊழியக்காரன்மேல் தீர்ப்பிடுகிறதற்கு நீ யார்? அவன் நின்றாலுஞ் சரி, விழுந்தாலுஞ் சரி எஷஜமானுக்கென்றே. ஆயினும் அவன் நிற்பான்: சர்வேசுரன் அவனை நிலை நிறுத்த வல்லவராயிருக்கிறார். (இயா. 4:13.)

கொலோசியர் 2:9-10

ஏனெனில் தெய்வத்துவத்தின் சம்பூரணமெல்லாம் அவரிடத்தில் சரீரப் பிரகாரமாய்க் குடிகொண்டிருக்கிறது. ழுழுழு 9. மனுஷ சுபாவம் தேவ சுபாவத்தோடு சேசுக்கிறீஸ்துநாதரில் ஒன்றித்தபடியால் தெய்வீக

மகத்துவமெல்லாம் அவரிடத்தில் வசித்திருந்ததென்று அர்த்தமேயொழிய தெய்வீகம் மனுஷஷரூபமாய் மாறிப்போனதென்று அர்த்தமில்லை. ஆகையால் உலக போதகங்களையும் யூதர் போதகங்களையும் புறக்கணித்து, திவ்விய கர்த்தரைப் பின்சென்றால் நாம் தவறிப்போகமாட்டோம். மேலும் எல்லாத் துரைத்தனத் துக்கும், அதிகாரத்துக்கும் தலைவரா யிருக்கிற அவரிடத்தில் நீங்கள் சம்பூரண மாக்கப்பட்டிருக்கிறீர்கள்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 7:37

பின்பு பண்டிகையின் முடிவாகிய பெரிய நாளிலே சேசுநாதர் நின்று சத்தமிட்டு: யாதொருவன் தாகமா யிருந்தால் என்னிடத்திலே வந்து பானம் பண்ணுவானாக. (லேவி. 23:27; இசை. 12:3; 55:1)